ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 2237/41 - 2021 ජූලි මස 25 වැනි ඉරිදා - 2021.07.25
*2237/41 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு யூலை மாதம் 25 ஆந் திகதி ஞாயிற்றுக்கிழமை*
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

பணிப்புரை இல. 82

**2003 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபைச் சட்டம்**

10(1) (அ) ஆம் பிரிவின் கீழான விசேட பணிப்புரை

2003 ஆம் ஆண்டின் 9ஆம் இலக்க பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபைச் சட்டத்தின் பிரிவு 10(1) (அ) இன் கீழ் உரித்தளிக்கப்பட்ட அதிகாரங்களின் கீழ் செயற்படுகின்ற பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையானது அனைத்து திரவப் பெற்றோலிய சமையல் எரிவாயு உற்பத்தியாளர்கள், விநியோகஸ்தர்கள், முகவர் அல்லது வியாபாரி குறிப்பிட்ட திரவப் பெற்றோலிய சமையல் எரிவாயு சிலிண்டரின் நிறை தெளிவாக விளங்கக்கூடிய இடத்தில் கிலோகிராம்களில் காட்சிப்படுத்தப்பட்டிருந்தாலன்றி எந்தவொரு திரவப் பெற்றோலிய சமையல் எரிவாயு சிலிண்டரையும் உற்பத்தி செய்யவோ, களஞ்சியப்படுத்தவோ, விநியோகிக்கவோ அல்லது விற்பனைக்காக காட்சிப்படுத்தவோ, வெளிப்படுத்தவோ அல்லது விற்பனைக்காக வழங்கவோ, மொத்தமாகவோ அல்லது சில்லறையாகவோ விற்பனை செய்யவோ முடியாதென பணிப்புரை விடுக்கின்றது.

இப்பணிப்புரை 2021 ஆம் ஆண்டு யூலை மாதம் 25 ஆந் திகதியிலிருந்து அமுலுக்கு வருகின்றது.

பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் கட்டளைப்படி,

மேஜர் ஜெனரல் **சாந்த திசாநாயக்க** (ஓய்வுபெற்ற),
தவிசாளர்.

கொழும்பு,
2021, யூலை 25.

1A - PG 5416 — 120 (2021/07) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.
*இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*